



# வேதாகமத்தை ஆராய்வது எப்படி

பாடம் 5 மே 2, 2026



“அப்படியே என் வாயிலிருந்து புறப்படும் வசனமும் இருக்கும்; அது வெறுமையாய் என்னிடத்திற்குத் திரும்பாமல், அது நான் விரும்புகிறதைச்செய்து, நான் அதை அனுப்பின காரியமாகும்படி வாய்க்கும்.” (ஏசாயா 55:11)



“தேவனுடைய பரிசுத்த மனுஷர்கள் பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டுப் பேசினார்கள்.” (2 பேதுரு 1:21), மேலும் அவர்கள் தங்கள் செய்தியை வேதாகமத்தின் பக்கங்களில் பதிவு செய்தனர்.

அதில் வாழ்வு, நம்பிக்கை, ஊக்கம் மற்றும் ஆறுதல் அளிக்கும் ரத்தினங்களை நாம் காண்கிறோம் ... சில, முதல் பார்வையிலேயே தென்படுகின்றன: மற்றவற்றையோ மிகவும் கவனமாக தேட வேண்டியுள்ளது.

வேதாகமத்தில் தேவன் நமக்காக ஆயத்தப்படுத்தியுள்ள இந்த இரத்தினங்களை நாம் எவ்வாறு வெளிகொணர முடியும்? மேலும், அதை ஆராய்ந்து படிப்பதன் மூலம் நாம் பெறும் நன்மைகள் யாவை?







**வேதாகமத்தை ஆராய்வது எப்படி:**

- நேரம்
- இடம்
- வழிமுறை

**வேதாகமத்தை ஆராய்வதன் நன்மைகள்:**


- அதை பகிர்வதன் நன்மை
- அதை உண்பதன் நன்மை

# வேதாகமத்தை ஆராய்வது எப்படி?



# நேரம்


"உங்கள் முழு இருதயத்தோடும் என்னைத் தேடினீர்களானால், என்னைத் தேடுகையில் கண்டுபிடிப்பீர்கள்." (எரேமியா 29:13)



வேதாகமத்தை படிப்பதற்கு சிறந்த நேரம் எது?

நாம் நமது எதிர்வினையை இரண்டு காரணிகளைக் கொண்டு பகுப்பாய்வு செய்ய வேண்டும்: காலக் காரணி மற்றும் தரக் காரணி

நமது கால அட்டவணையில் வேதாகம படிப்புக்காக வெறும் ஐந்து நிமிடத்தை ஒதுக்குவதைவிட, ஒரு மணி நேரத்தை ஒதுக்குவதன் மூலம் நாம் நிச்சயமாக அதிக பயனை பெறுவோம்.






எனினும், நாம் படிப்பதற்காக ஒதுக்கும் நேரத்தை, மேலோட்டமான வாசிப்போடு மட்டும் சுறுக்கிவிட இயலாது. இங்கேயே நமது ஊக்கம் முக்கிய பங்கு வகிக்கிறது. நான் ஏன் வேதாகமத்தை வாசிக்கிறேன்? நான் வெறும் அறிவை மட்டுமே தேடுகிறேனா? அல்லது தேவனை பற்றி இன்னும் அதிகமாக அறிந்துகொள்ள வேண்டும் என்ற ஆழ்ந்த விருப்பம் என்னுள் இருக்கிறதா?

நமது வேதாகம படிப்பு, நாம் தேவனோடு இருக்கும் ஒரு நேரமாகவும்(எரே. 29:13), அவரில் மகிழ்ச்சி கொள்ளும் நேரமாகவும் (சங். 37:4) அமையும் போதும்; அதன் பக்கங்களில் நமக்கென தேவன் அருளும் விஷேசித்த செய்தியை நாம் தேடும் போதும், நாம் அதிலிருந்து முழுமையான பயனை பெறுவோம்.

# இடம்

"அவர் அதிகாலையில், இருட்டோடே எழுந்து புறப்பட்டு, வனாந்தரமான ஓரிடத்திற்குப்போய், அங்கே ஜெபம்பண்ணினார்." (மாற்கு 1:35)


இயேசு தேவனோடு சிறப்பான ஓர் ஐக்கியத்தை விரும்பும்போதெல்லாம், அவர் அதிகாலையிலேயே எழுந்து, அமைதியான ஓர் இடத்தை தேடி செல்வார் (மாற்கு 1:35). இது ஜெபம் மற்றும் வேதாகம படிப்பு ஆகிய இரண்டிற்கும் பொருந்தும்.





இரைச்சல் மிகுந்த அல்லது பரபரப்பான இடத்தில் படிப்பில் கவனம் செலுத்துவது கடினம். வசதியான, அமைதியான மற்றும் தனிமையான இடத்தில் அவ்வாறு செய்வது எளிது.

நாளின் முதல் அல்லது கடைசி நேரங்கள் - அப்போது அமைதி அதிகம் நிலவும் - நமது சிந்தனைகளை இறைவன் மீது மிக எளிதாக ஒருமுகப்படுத்தக் கூடிய நேரங்களாக அமையலாம்.





சரியான நேரத்தையும் இடத்தையும் நாம் கண்டறிந்த பிறகு, இதை வழக்கமான செயல்பாடாக மாற்றிக்கொள்வோம். ஒருவேளை ஏதேனும் சிறப்பான சூழல் காரணமாக அந்த நேரத்தை நாம் தவறவிட நேரிடலாம்: ஆயினும், நமது தினசரி வேதாகம படிப்பின்றி அதிக காலம் கடந்துவிட நாம் அனுமதிக்கக்கூடாது



# வழிமுறை (1)

“அப்படியே என் வாயிலிருந்து புறப்படும் வசனமும் இருக்கும்; அது வெறுமையாய் என்னிடத்திற்குத் திரும்பாமல்,…”
(ஏசாயா 55:11)

## வேதாகமத்தின் ஆழமான ஆய்வு நான்கு பிரிவுகளை கொண்டுள்ளது

### ஜெபி

- உங்கள் படிப்புகளில் உங்களுக்கு வழிகாட்டியாக இருக்க பரிசுத்த ஆவியானவரை அழையுங்கள்
- நீங்கள் வாசிப்பதை புரிந்துகொள்ளும் வகையில், அவர் உங்கள் இதயத்தையும் மனதையும் தொடுவார்

### வாசித்து புரிந்துகொள்ளுதல் [பரிந்துரைக்கப்பட்ட நுட்பம்]

- வேதாகமத்திலிருந்து ஒரு வசனத்தையோ அல்லது பகுதியையோ தேர்ந்தெடுங்கள்
- உங்கள் மனதில் ஆழப் பதியவைக்க உதவும் வகையில், அதை எழுதி வையுங்கள்
- முக்கிய கருத்துக்களை அடிக்கோடிடுங்கள்
- அந்த முக்கிய கருத்துக்களுக்கு உத்வேகம் அளிக்கும் எண்ணங்களை எழுதி வையுங்கள்

### ஜெபி

- நீங்கள் கற்றுக்கொண்ட கருத்துக்களை பயன்படுத்த, உங்களுக்கு உதவும்படி தேவனிடம் வேண்டுங்கள்

### பகிர்ந்துகொள்


- நீங்கள் கற்றுக்கொண்டவற்றை யாருடன் பகிர்ந்து கொள்ளலாம் என்பதை பற்றி சிந்தியுங்கள்





# வழிமுறை (2)


“அப்படியே என் வாயிலிருந்து புறப்படும் வசனமும் இருக்கும்; அது வெறுமையாய் என்னிடத்திற்குத் திரும்பாமல்,...” (ஏசாயா 55:11)



## பிற வேதாகம ஆய்வு முறைகள்

- வசனத்தை வசனத்தோடு ஒப்பிடுக (ஏசாயா 28:10)
- அதிகாரங்களையோ முழு புத்தகங்களையோ படியுங்கள்
- ஒரு சொற்ப்பட்டியலின் உதவியுடன் ஒரு தலைப்பையோ அல்லது சொல்லையோ ஆய்வு செய்யுங்கள்
- வேதாகம விளக்கவுரைகள் அல்லது அகராதிகளை பார்க்கவும்
- எலன் உவைட்டின் “கான்ப்ளிக்கட் ஆப் த ஏஜஸ்” தொடரிலிருந்து எடுக்கப்பட்ட பத்திகளுடன் இணையாக வாசிக்கவும்





# வேதாமத்தை ஆராய்வதன் நன்மைகள்



# அதை பகிர்வதன் நன்மை

"இளைப்படைந்தவனுக்கு சமயத்திற்கேற்ற வார்த்தை சொல்ல நான் அறியும்படிக்கு, கர்த்தராகிய ஆண்டவர் எனக்குக் கல்விமானின் நாவைத் தந்தருளினார்; காலைதோறும் என்னை எழுப்புகிறார்; கற்றுக்கொள்ளுகிறவர்களைப்போல, நான் கேட்கும்படி என்செவியைக் கவனிக்கச்செய்கிறார்." (ஏசாயா 50:4)

ஓய்வுநாளில் நடைபெறும் ஆராதனைக்காக ஒரு பிரசங்கத்தை தயாரிக்குமாறு நீங்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள். பரிசுத்த ஆவியானவர் தேர்தெடுக்குமாறு உங்களை தூண்டிய ஒரு தலைப்பை, ஜெபத்தோடு ஆராய்வதற்காக நீங்கள் சிறப்பு காலத்தை அர்ப்பணிக்கிறீர்கள். ஓய்வுநாளன்று, நீங்கள் வல்லமையோடு பிரசங்க்கிறீர்கள். இந்த பிரசங்கத்தின் மூலம் அதிக பயனடைய போவது யார்?





நாம் மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளும் ஒரு வேதாகம படிப்பு – அது ஒரு பிரசங்கத்தின் வாயிலாகவோ அல்லது தனிப்பட்ட நிலையிலோ இருந்தாலும் - இரட்டை பயனைத் தருகிறது.



முதலாவதாக, நாம் கற்றுக் கொண்டவற்றிலிருந்து நாம் பயனடைகிறோம். இரண்டாவதாக, நாம் யாருடன் இந்த அறிவை பகிரந்து கொள்கிறோமோ, அவர்கள் பயனடைவதுடன், அந்த அறிவை இன்னும் ஆழமாக ஆராய்வதற்கும் ஊக்குவிக்கப்படுகிறார்கள்.





இரண்டு சூழல்களிலும், தேவனுடனான உறவு வலுப்படுத்தப்பட்டு ஆழப்படுத்தப்படுகிறது. தேவனுடைய வார்த்தையின் வல்லமை அத்தகையதே, அது “அது வெறுமையாய் என்னிடத்திற்குத் திரும்பாமல்,” (ஏசாயாய 55:11).

# அதை உண்பதன் நன்மை

"உம்முடைய வார்த்தைகள் என் நாவுக்கு எவ்வளவு இனிமையானவைகள், என் வாய்க்கு அவைகள் தேனிலும் மதுரமாயிருக்கும்." (சங்கீதம் 119:103)

நாம் தேவனுடைய வார்த்தையை புசிக்க வேண்டும் (எரே. 15:16)! இது தேனைவிட இனிமையானதாக இருந்தாலும், நாம் இதை சொல்லுக்கு சொல் உண்ணக்கூடாது (சங்கீதம் 119:103). வேதாகமத்தை வாசிப்பது ஆன்மாவிற்கு உணவாகவும், நமது ஆவியை குணப்படுத்தி நமது குணநலன்களை உருமாற்றும் ஒரு உண்மையான புத்துணர்ச்சியாகவும் திகழ்கிறது.



மேலும் இந்த உணவு இலவசம் (ஏசாயா 55:1)! நாம் வெறுமனே நெருங்கி சென்று வேதாகமத்தின் வாயிலாக தேவன் நமக்கு சொல்வதை கேட்க வேண்டும்(ஏசாயா 55:3). அதன் பக்கங்களை ஆழ்ந்து படிப்பதில் நாம் எவ்வளவு அதிக நேரத்தை செலவிடுகிறோமோ, அவ்வளவு அதிக ஊட்டசத்தை நாம் பெறுவோம்: மேலும், அவ்வளவு அதிக ஆசீர்வாதங்களையும் நாம் அடைவோம்.



"மனிதனின் அறிவுசார் வளர்ச்சி எத்தகையதாக இருப்பினும், மேலான ஒளியைப் பெறுவதற்குத் திருமறைகளைத் தீவிரமாகவும் தொடர்ச்சியாகவும் ஆராய வேண்டிய தேவை இல்லை என்று அவன் ஒரு கணம்கூட எண்ணிவிடக் கூடாது. ஒரு மக்களாகிய நாம், தனித்தனியே இறைவாக்குக் குறிப்புகளின் மாணவர்களாகத் திகழ அழைக்கப்பட்டிருக்கிறோம்."- எலன் ஜி உவைட், கவுன்சல்ஸ் ஆ.்.ப் ரைட்டர்ஸ் அன்ட் எடிட்டர்ஸ், பக். 41

“தேவவார்த்தையை வெறும் வாசிப்பதினால் மட்டும், பரலோகம் நோக்கமாகக் கொண்ட பலன் நிறைவேறாது; அது ஆழ்ந்து பயிலப்படவும், இருதயத்தில் பொக்கிஷமாகப் போற்றப்படவும் வேண்டும். மனமுயற்சி இல்லாமல், தேவனைக் குறித்த அறிவைப் பெற்றுக்கொள்ள இயலாது. தேவனுடைய வார்த்தையை நாம் புரிந்துகொள்ளும் பொருட்டு, பரிசுத்த ஆவியானவரின் உதவியை அவரிடமே வேண்டி, நாம் வேதத்தை மிகுந்த ஊக்கத்துடன் பயில வேண்டும். நாம் வேதத்திலிருந்து ஒரு வசனத்தை எடுத்துக்கொண்டு, அந்த வசனத்தின் வாயிலாக தேவன் நமக்கென்று வெளிப்படுத்தியுள்ள சிந்தனையை அறிந்துகொள்வதிலேயே நமது முழு மனதையும் ஒருமுகப்படுத்த வேண்டும். [...]

தேவ வார்த்தையே வாழ்வின் அப்பமாகும். இவ்வார்த்தையைப் புசித்து, அதைத் தங்கள் ஒவ்வொரு செயலின் மற்றும் குணநலனின் ஓர் அங்கமாக ஆக்கிக்கொள்பவர்கள், தேவ வல்லமையினால் வலிமை பெறுகிறார்கள். இது ஆன்மாவிற்கு அழியாத வீரியத்தை அளித்து, வாழ்வின் அனுபவங்களைச் செம்மைப்படுத்துவதுடன், என்றென்றும் நிலைத்திருக்கும் மகிழ்ச்சிகளையும் வழங்குகிறது.

எலன் ஜி உவைட் (லி.ஃ.ப்ட் ஹிம் அப், ஏப்ரல் 7)